## நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
## NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை
# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## இடைநிலை மேற்பிரிவு (ஆண்டு 9 & 10)
## Intermediate Upper Level (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்

Time Given : 120 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

Aug 2024

1 – 40 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1 X 40 = 40 புள்ளிகள்)

**ஒத்த சொல் தருக (வினாக்கள் 1 – 3).**

1. சந்திரன் என்ற சொல்லுக்குரிய ஒத்த சொல்.
   (அ) சூரியன் (ஆ) நிலா (இ)நட்சத்திரம் (ஈ) மேகம்

2. பூ என்ற சொல்லுக்குரிய ஒத்த சொல்.
   (அ) மல்லிகை (ஆ) இலை (இ) இதழ் (ஈ) மலர்

3. அரசன் என்ற சொல்லுக்குரிய ஒத்த சொல்.
   (அ) அமைச்சன் (ஆ) தளபதி (இ) வேந்தன் (ஈ) சேவகன்

எதிர்ச்சொல் தருக (வினாக்கள் 4 – 5)

4. மேடு என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல்.
   (அ) மலை (ஆ) பள்ளம் (இ) உயர்வு (ஈ) தாழ்வு

5. அதிஷ்டம் என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல்.
   (அ) ஆச்சரியம் (ஆ) அதிசயம் (இ) வாய்ப்பு (ஈ) துரதிஷ்டம்

**பழமொழிகளின் பொருளைத் தெரிவு செய்க (வினாக்கள் 6 – 10).**

6. ‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’ என்ற பழமொழி புலப்படுத்தும் சரியான அர்த்தம்.
   (அ) இளம் காலத்தில் பயின்ற கல்வி அழகான சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்தாகும்.
   (ஆ) இளமைக் காலத்தில் கற்ற கல்வி கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து போன்றதாகும்.
   (இ) இளமைக் காலத்தில் கற்ற விடயங்கள் எமது மனதில் நீங்காது நிலைத்து இருக்கும்.
   (ஈ) இளமைக் காலத்தில் கற்றுக்கொண்ட விடயங்கள் மலையில்பொறிக்கப்பட்ட எழுத்துக்கு சமமானதாகும்.

7. ‘விளையும் பயிரை முளையில் தெரியும்’ என்ற பழமொழியின் சரியான கருத்து.
   (அ) விதை முளை விடும்போது அது என்ன பயிர் என்பதை கண்டு கொள்வோம்.
   (ஆ) ஒருவருடைய சிறு பிராய நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு அவர் எதிர்காலத்தில் எப்படி வருவார் என்பதை அறிந்து கொள்ளலாம்.
   (இ) ஒரு பயிர் முளைத்து வளர்கின்றபோது அதன் இயல்பை அறிந்து கொள்ளலாம்.
   (ஈ) ஒரு விதை முளைக்கும் போது அது தப்புமா? கருகுமா ? என்பதை அறியலாம்.

8. ‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’ என்ற பழமொழியின் சரியான பொருள்.
   (அ) ஒவ்வொருவரும் தமக்கு கிடைக்கும் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.
   (ஆ) காற்று வீசுகின்ற போது மற்றவர்களை தூற்ற வேண்டும்.
   (இ) காற்று வீசும் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலிருந்து பெருக்க (கூட்ட) வேண்டும்.
   (ஈ) காற்று வீசும் பக்கத்தில் பெருக்க (கூட்ட) வேண்டும்.

9. ‘வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்’ என்ற பழமொழி கூறும் சரியான விடயம்.

(அ) மழை பெய்யத் தொடங்கும் முன்னரே பலமான அணையைக் கட்ட வேண்டும்.

(ஆ) மழை வெள்ளம் ஓடி வருவதற்கு முன்பே அணையைக் கட்ட வேண்டும்.

(இ) வெள்ளப்பெருக்கு ஏற்பட்டவுடன் அணையைக் கட்ட வேண்டும்.

(ஈ) ஒரு பிரச்சனை ஏற்படுவதற்கு முன்பே அதனைத் தடுப்பதற்கான வழிவகைகளைச் செய்து விடல் வேண்டும்.

10. ‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ என்ற பழமொழி புலப்படுத்தும் சரியான விடயம்.

(அ) அடம்பன் கொடி ஒன்று சேர்ந்தால் கம்பீரமாகக் காட்சியளிக்கும்.

(ஆ) பலவீனமான அடம்பன் கொடி பலவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டினால் அது பலமானதாக மாறும்.

(இ) நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் பலவற்றைச் சாதிக்கலாம்.

(ஈ) கொடிகளையும் சிறு தடிகளையும் சேர்த்துக் கட்டினால் அவை பலமானதாக மாறும்.

**சரியான விடையைத் தெரிவு செய்க (வினாக்கள் 11 – 15).**

11. இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழா

(அ) முத்து விழா (ஆ) பவள விழா

(இ) பொன்விழா (ஈ) வெள்ளி விழா

12. தேச அபிமானி என்பதன் பொருள்

(அ) தனது தேசத்தில் ( நாட்டில்) அபிமானம்( பற்று) வைத்திருப்பவன்.

(ஆ) பிற தேசங்களின் மீது அபிமானம் வைத்திருப்பவன்.

(இ) அயல் நாடுகளின் மீது அபிமானம் வைத்திருப்பவன்.

(ஈ) மேலே கூறப்பட்டவை எல்லாம் சரி.

13. கடலோடு தொடர்புடைய நிலம்

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) நெய்தல்

14. மலையில் ஊற்றெடுத்து செங்குத்தாகத் தரையை நோக்கிப் பாயும் நீர்ப் பிரவாகம்

(அ) ஆறு (ஆ) அருவி

(இ) நீர்வீழ்ச்சி (ஈ) வெள்ளம்

15. நான்கு பக்கங்களிலும் நீரினால் சூழப்பட்ட நிலப்பகுதி

(அ) தீவு (ஆ) குடாநாடு

(இ) கழிமுகம் (ஈ) கண்டம்

**பின்வரும் மரபுத்தொடர், உவமை தொடர்களை விளங்கி சரியான விடையைத் தெரிக.**
**(வினாக்கள் 16 – 20)**

16. நான் விரும்புகின்ற பெண்ணையே திருமணம் செய்வேன் என்று எனது மகன் ஒற்றைக் காலில் நிற்கின்றான். ஒற்றைக் காலில் நிற்றல் என்ற மரபுத்தொடர் புலப்படுத்தும் விடயம்.
    (அ) ஆசைப்படுதல் (ஆ) ஒரு காலில் நிற்றல்
    (இ) பிடிவாதம் பிடித்தல் (ஈ) எல்லாம் சரி

17. புறக் குடத்தில் ஊற்றிய நீர் போல என்ற உவமைத்தொடர் கூறும் விடயம்
    (அ) பிரயோசனமானது (ஆ) உபயோகமானது
    (இ) பயனற்றது (ஈ) பிரதிபலன் எதிர்பாராதது

18. கமலன் பேச்சுப்போட்டிக்குரிய பேச்சு முழுவதையும் கரைத்துக் குடித்து விட்டான். கரைத்துக் குடித்தல் என்ற மரபுத்தொடர் புலப்படுத்தும் விடயம்.
    (அ) வாசித்தல் (ஆ) எழுதுதல்
    (இ) மனனம் செய்தல் (ஈ) எல்லாம் சரி

19. ‘உள்ளங்கை நெல்லிக்கனி போல’ என்ற உவமைத்தொடர் புலப்படுத்தும் விடயம்.
    (அ) தெளிவாகத் தெரிதல் (ஆ) மங்கலாகத் தெரிதல்
    (இ) அரிதாகத் தெரிதல் (ஈ) தெரியாமல் மறைத்தல்

20. ‘பசுமரத்தாணி போல’ என்ற உவமைத்தொடர் புலப்படுத்தும் விடயம்.
    (அ) பசு–மரம், ஆணி (ஆ) பச்சை மரத்தில் அடிக்கப்பட்ட ஆணி
    (இ) பசுக்கள் கட்டப்படும் இடம் (ஈ) இலகுவாக மனதில் பதிவது

**சரியான விடையைத் தெரிவு செய்க. (வினாக்கள் 21 – 25)**

21. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை எழுதியவர்.
    (அ) கோவலன் (ஆ) பாரதியார் (இ) கம்பர் (ஈ) இளங்கோவடிகள்

22. சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தின் நாயகி.
    (அ) கண்ணகி (ஆ) மாதவி (இ) மணிமேகலை (ஈ) சீதை

23. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று அல்லாதது.
    (அ) வளையாபதி (ஆ) நாககுமார காவியம் (இ) குண்டலகேசி (ஈ) சீவக சிந்தாமணி

24. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே என்று தொடங்கும் தமிழ் மொழி வாழ்த்தை இயற்றியவர்.
    (அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
    (இ) பாரதியார் (ஈ) கண்ணதாசன்

25. கம்பராமாயணத்தின் கதாநாயகன்.
    (அ) இராவணன் (ஆ) இலட்சுமணன் (இ) இராமன் (ஈ) அனுமன்

**வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க. (வினாக்கள் 26 – 30)**

26. (அ) கட்டில் (ஆ) பானை (இ) நாற்காலி (ஈ) மேசை

27. (அ) கோதுமை (ஆ) வரகு (இ) சோளம் (ஈ) தக்காளி

28. (அ) காகம் (ஆ) மீன் (இ) புறா (ஈ) குயில்

29. (அ) வடகிழக்கு (ஆ) வடக்கு (இ) கிழக்கு (ஈ) மேற்கு

30. (அ) தவில்( மேளம்) (ஆ) மிருதங்கம் (இ) புல்லாங்குழல் (ஈ) பறை

**இடைவெளியை நிரப்பக்கூடிய பொருத்தமான அடுக்குத் தொடர்களைத் தெரிவு செய்க. (வினாக்கள் 31 – 35)**

31. அம்மா சுவாமி அறையில் ஏற்றி வைத்த ஊதுபத்தி ________ என்று வாசனை வீசியது.

(அ) கலகல (ஆ) சல சல (இ) கம கம (ஈ) பொல பொல

32. யோகி பாபு நடித்த நகைச்சுவைத் திரைப்படத்தைப் பார்த்து வாணி ________ என்று சிரித்தாள் .

(அ) சல சல (ஆ) பொல பொல (இ) வழ வழ (ஈ) கல கல

33. யாரும் இல்லாத வீட்டினுள் புகுந்த திருடன் ________ என்று பொருட்களை எடுத்துக்கொண்டு ஓடினான்.

(அ) கொழ கொழ (ஆ) வழ வழ (இ) வெட வெட (ஈ) மள மள

34. ஆற்று நீர் ________ என்ற ஓசையுடன் ஓடிக்கொண்டிருந்தது.

(அ) சலசல (ஆ) படபட (இ) பொலபொல (ஈ) கம கம

35. கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்டவுடன் கண்ணகியின் கண்களில் இருந்து கண்ணீர் ________ எனக் கொட்டியது.

(அ) கல கல (ஆ) பொல பொல (இ) மழ மழ (ஈ) வெட வெட

**சரியான விடையைத் தெரிவுசெய்க. (வினாக்கள் 36 – 40)**

36. கண்ணன் என்ற சொல்.

(அ) வினைச்சொல் (ஆ) உரிச்சொல் (இ) திசைச் சொல் (ஈ) பெயர்ச்சொல்

37. எனது மாமா குடும்பத்தினர் நாளைக்கு எங்கள் வீட்டிற்கு வருவார்கள். வருவார்கள் என்பது

(அ) எதிர்கால வினைமுற்று (ஆ) நிகழ்கால வினைமுற்று

(இ) இறந்த கால வினைமுற்று (ஈ) எதிர்காலம் வினையெச்சம்

38. குரங்குகள் மரத்துக்கு மரம் தாவிப் பாய்ந்தன என்ற வாக்கியத்தில் குரங்குகள் என்ற சொல்

(அ) ஆண்பால் (ஆ) பலர்பால் (இ) பலவின்பால் (ஈ) ஒன்றன்பால்

39. க், ச், ட், த், ப், ற் என்பன

(அ) மெல்லின மெய் எழுத்துக்கள் (ஆ) இடையின மெய் எழுத்துக்கள்

(இ) வல்லின மெய் எழுத்துக்கள் (ஈ) உயிர் எழுத்துக்கள்

40. அஃறிணை என்ற சொல்லில் உள்ள ஃ என்ற எழுத்து

(அ) உயிர் எழுத்து (ஆ) மெய் எழுத்து (இ) உயிர்மெய் எழுத்து (ஈ) ஆய்த எழுத்து

**பின்வரும் தகவல் தொடர்பு சாதனங்களுக்குரிய தமிழ்ச் சொல்லை கோடிட்ட இடத்தில் எழுதுக (வினாக்கள் 41 – 45)** – 5 புள்ளிகள்

41. RADIO 42. TELEVISION 43.TELEPHONE

44. MOBILE PHONE 45. COMPUTER

**சேர்த்தெழுதுக (வினாக்கள் 46 – 50)** – 5 புள்ளிகள்

46. வெம்மை + நீர் 47. மலர் + வண்டு 48. இனிமை + இசை

49. மூன்று + தமிழ் 50. முள் + புதர்

**பிரித்தெழுதுக (வினாக்கள் 51 – 55)** – 5 புள்ளிகள்

51. பரீட்சைத்தாள் 52. முக்கனி 53.வாரந்தோறும்

54. நாற்புறம் 55. திரையரங்கு

**பின்வரும் உரைப் பகுதியிலுள்ள இடைவெளிகளை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து நிரப்புக (வினாக்கள் 56 – 60)** – 5 புள்ளிகள்

சத்துக்கள் விரும்பி பதிலாக சிறப்பு கனியாகும்

கனி வகைகளில் நெல்லிக்கனிக்குத் தனிச் (56)__________ உண்டு. இதன் பெருமையை ஆயுர்வேத மருத்துவ உலகம் நன்கு அறியும். இது சற்று துவர்ப்புச் சுவையுடன் இருக்கும் கனியாகும். ஆதலால் இதனைப் பெரும்பாலானோர் (57)__________ சாப்பிடுவது கிடையாது. இது நம் உடல் நலத்திற்கு ஏற்ற மிகச் சிறந்த (58) __________ . இதை நாம் தினமும் உட்கொண்டால் நமக்கு உடல்நலப் பிரச்சனைகள் அதிகம் வருவதற்கு வாய்ப்பு இருக்காது என்று மருத்துவ வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆகவே நாம் மருந்துக் கடைகளுக்குச் சென்று சத்து மாத்திரைகளைச் சாப்பிடுவதற்குப் (59)__________ நெல்லிக்கனியைச் சாப்பிட்டு வந்தால் போதும். நம் உடலுக்குத் தேவையான (60) __________ நமக்கு உடனடியாகக் கிடைத்துவிடும்.

**61 முதல் 65 வரை உள்ள வினாக்களுக்கு பின்வரும் உரைப்பகுதியை வாசித்து விடை எழுக.**

தமிழ் மொழி ஆயிரக்கணக்கான வருடங்களாக இலக்கண, இலக்கிய வளத்தோடு திகழ்கின்ற பழமை யான மொழியென்று வெளிநாட்டு அறிஞர்களாலும் போற்றப்படுகின்ற சிறந்த மொழியாகும். ஒரு மொழி கையாளப்பட வேண்டிய விதிமுறைகளைக் கூறுவது இலக்கணம் ஆகும். ஒரு கால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது இலக்கியம் ஆகும். அதாவது காலத்தின் கண்ணாடி இலக்கியமாகும். இலக்கியம் என்ற சொல்லை இலக்கு + இயம் என்று பிரித்து ஒரு இலக்குக்காக அதாவது இலட்சியத்திற்காக இயம்பப்பட்டது. அதாவது கூறப்பட்டது என்று இன்னொரு வரைவிலக்கணமும் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக சங்ககால இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு என்பன அக்கால மக்களின் வாழ்க்கையில் பிரதான அம்சங்களாக இருந்த காதல், போர் போன்றவற்றைக் கூறும்போது சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருக்குறள், ஆசாரக்கோவை என்பன மக்கள் ஒழுக்கத்துடன் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

அகத்திய முனிவரால் எழுதப்பட்ட அகத்தியம் தமிழில் தோன்றிய முதலாவது இலக்கண நூலென்று கூறப்படுகின்றது. ஆனால் அது பற்றிய எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. எமக்குக் கிடைத்த மிக தொன்மையான (பழமையான) இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். பாண்டிய வம்சத்தின் இரண்டாவது மன்னனான நிலம்தரு திருவிற்பாண்டியனின் அரசவையில் தொல்காப்பியம் அரங்கேற்றம் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. தற்போது நாங்கள் கற்கும், கற்பிக்கும் தமிழ் இலக்கணத்திற்கு ஆதாரமாக சோழர் காலத்தில் தோன்றிய நன்னூல் விளங்குகின்றது.

தமிழ் இலக்கியத்தின் வகைகளாக கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் என்பன விளங்குகின்றன. தமிழில் முதன் முதலாக உருவாகிய இலக்கிய வடிவமாகக் கவிதை உள்ளது. ஐரோப்பியர் வருகையின் பின்பே சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய இலக்கிய வகைகள் தமிழில் தோன்றின. கவிதை என்பது பாடலைக் குறிக்கின்றது. சிறுகதை என்பது குறுகிய நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடி குறுங்கதையாகும். நாவல் என்பது நீண்ட நேரம் எடுத்து வாசித்து முடிக்கக்கூடிய நெடுங்கதையாகும். நாடகமென்பது பரந்ததொரு உலகத்தை மேடை என்னும் வரம்பிற்குள் காட்டுகின்ற சக்தி மிக்க கலை ஆகும். உங்களின் கலை விழா மேடைகளில் நீங்கள் அயோத்தியைக் காட்டுகிறீர்கள். அஸ்தினாபுரத்தைக் காட்டுகிறீர்கள். தமிழ்நாட்டைக் காட்டுகிறீர்கள். ஈழத்தை (இலங்கையை) காட்டுகிறீர்கள்.

61. தமிழ்மொழி பற்றி வெளிநாட்டு அறிஞர்களின் அபிப்பிராயம் என்ன? (2 புள்ளிகள்)

62. இலக்கணம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

63. இலக்கியம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

64. உங்களுக்கும் நாடக இலக்கியத்திற்கும் இடையில் உள்ள தொடர்பைச் சுருக்கமாக எழுதுக. (3 புள்ளிகள்)

65. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள இடை வெளிகளை நிரப்புக. (5 புள்ளிகள்)

**66. பின் வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

**(25 புள்ளிகள்)**

அ. நாங்கள் எங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நாங்கள் வாழ்கின்ற வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எங்களின் நாட்டையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
‘சுத்தம் சுகம் தரும்’ என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை எழுதுக.

ஆ. ஆழ்ந்த உறக்கத்தில் கனவுகள் தோன்றுகின்றன. கனவுகள் காணாத மனிதனில்லை. ஆனந்தமான கனவுகள், ஆச்சரியமான கனவுகள், துன்பமான கனவுகள், பயங்கரமான கனவுகள் எனப் பல வகையான கனவுகள் தோன்றுகின்றன.
‘நான் கண்ட மகிழ்ச்சியான கனவு’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

இ. தாங்கள் அடைகின்ற கஷ்டங்களையும், துன்பங்களையும் சோதனைகளையும் பொருட்படுத்தாமல், பிள்ளைகளின் நன்மை, மேன்மை, மகிழ்ச்சி என்பவைகளைக் கருத்தில் கொண்டு ஒரு தியாக வாழ்க்கை வாழ்பவர்களாகப் பெற்றோர்கள் இருக்கின்றார்கள்.
‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை மேற்பிரிவு
Intermediate Upper Level

சுட்டிலக்கம் :
Index Number :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அ | ஆ | இ | ஈ | 21. | அ | ஆ | இ | ஈ |
| 2. | அ | ஆ | இ | ஈ | 22. | அ | ஆ | இ | ஈ |
| 3. | அ | ஆ | இ | ஈ | 23. | அ | ஆ | இ | ஈ |
| 4. | அ | ஆ | இ | ஈ | 24. | அ | ஆ | இ | ஈ |
| 5. | அ | ஆ | இ | ஈ | 25. | அ | ஆ | இ | ஈ |
| 6. | அ | ஆ | இ | ஈ | 26. | அ | ஆ | இ | ஈ |
| 7. | அ | ஆ | இ | ஈ | 27. | அ | ஆ | இ | ஈ |
| 8. | அ | ஆ | இ | ஈ | 28. | அ | ஆ | இ | ஈ |
| 9. | அ | ஆ | இ | ஈ | 29. | அ | ஆ | இ | ஈ |
| 10. | அ | ஆ | இ | ஈ | 30. | அ | ஆ | இ | ஈ |
| 11. | அ | ஆ | இ | ஈ | 31. | அ | ஆ | இ | ஈ |
| 12. | அ | ஆ | இ | ஈ | 32. | அ | ஆ | இ | ஈ |
| 13. | அ | ஆ | இ | ஈ | 33. | அ | ஆ | இ | ஈ |
| 14. | அ | ஆ | இ | ஈ | 34. | அ | ஆ | இ | ஈ |
| 15. | அ | ஆ | இ | ஈ | 35. | அ | ஆ | இ | ஈ |
| 16. | அ | ஆ | இ | ஈ | 36. | அ | ஆ | இ | ஈ |
| 17. | அ | ஆ | இ | ஈ | 37. | அ | ஆ | இ | ஈ |
| 18. | அ | ஆ | இ | ஈ | 38. | அ | ஆ | இ | ஈ |
| 19. | அ | ஆ | இ | ஈ | 39. | அ | ஆ | இ | ஈ |
| 20. | அ | ஆ | இ | ஈ | 40. | அ | ஆ | இ | ஈ |

| | | | |
|---|---|---|---|
| 41. | | 51. | |
| 42. | | 52. | |
| 43. | | 53. | |
| 44. | | 54. | |
| 45. | | 55. | |
| 46. | | 56. | |
| 47. | | 57. | |
| 48. | | 58. | |
| 49. | | 59. | |
| 50. | | 60. | |

61.

62.

63.

64.

**65.** அட்டவணையில் உள்ள இடை வெளிகளை நிரப்புக.

| | |
|---|---|
| மூன்று இலக்கண நூல்கள் | 1. |
| | 2. |
| | 3. |
| வாழ்க்கையைக் கூறும் இரண்டு இலக்கியங்கள் | 1. |
| | 2. |
| ஒழுக்கத்தைக் கூறும் இரண்டு இலக்கிய நூல்கள் | 1. |
| | 2. |
| நான்கு இலக்கிய வகைகள் | 1. |
| | 2. |
| | 3. |
| | 4. |

## 66. கட்டுரை எழுதுதல்;